

# மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி

## பாண்டியன் கல்வி அறக்கட்டளை

## பாண்டியன் கோவில் கலைகள்

## தமிழ் ஆய்விதழ்


*அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்*

E-ISSN: 2583-0880


## சிறப்பிதழ்

## “மதுரை கோவில்களும் திருவிழாக்களும்”


சிறப்பிதழ் ஆசிரியர்

**முனைவர் தி. பரிமளா**

தலைவர் & உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலை நாயக்கர்கல்லூரி (தன்னாட்சி),
பசுமலை, மதுரை– 625 004.

இதழ்ப்பதிப்பாசிரியர்

**முனைவர் கி. நாகேந்திரன்,**

பாண்டியன் கோவில் கலைகள்
தமிழ் ஆய்விதழ், விருதுநகர்.


**மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி**

மதுரை மாநகரில் கல்விப்பணியில் சிறந்து விளங்கும் ‘மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி’ தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவினரால் ‘A’ தகுதி பெற்று சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத்தினரால் 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டு 18 ஆம் நாள் தொடங்கப்பட்டது. கல்வியின்மை மற்றும் வறுமையில் பின்தங்கிய மாணவர்கள் பொருளாதாரத்திலும், வேலை வாய்ப்பு, மற்றும் கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக, குறைந்த மாணவர் எண்ணிக்கையில் தொடங்கப்பட்ட இக்கல்லூரி, இன்று தன்னாட்சிப் பெற்று, மூவாயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயிலும் அறிவாலயமாக உள்ளது. கல்லூரியின் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் சார்பாக ஒவ்வொரு துறையிலும் கருத்தரங்கம், கண்காட்சி, நாடகம் மற்றும் கலை சார்ந்த நிகழ்வுகள் வருடந்தோறும் நடைபெறுகின்றன. இத்தகையப் பெருமை வாய்ந்த மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில், சுயநிதிப்பிரிவின் தமிழ்த்துறையானது சிறப்புடன் இளங்கலை மற்றும் முதுகலை பாடப்பிரிவுடன் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தை வளர்க்கும் வண்ணம், பல்வேறு கருத்தரங்குகளையும், படைப்புகளை நூலாகவும் வெளியிட்டுள்ளது. யுஜிசி (UGC) அங்கீகாரம் பெற்ற இணைய இதழ்களுடன் இணைந்து பல கருத்தரங்குகளையும் நடத்தியுள்ளது. அந்த வகையில் ***பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்*** என்ற பன்னாட்டு இணைய ஆய்விதழுடன் இணைந்து ***மதுரை கோவில்களும் திருவிழாக்களும்*** என்ற பொருண்மையில் கருத்தரங்கம் நடத்தி ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. மதுரை மாநகரம் கோவில் நகரம், திருவிழாக்க**ளின்** நகரம் என சங்ககாலம் தொட்டு இன்று வரை போற்றப்படுகிறது. மதுரை மாநகர் கட்டிடக் கலைகளுக்கும், நாகரீகத்திற்கும் பெயர் பெற்ற நகரமாகத் திகழ்கிறது. சைவ, வைணவ இணைப்பு விழாக்களும், நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் பாடப்பெற்ற திருத்தலங்களும், திருவிளையாடற் புராணத்தின் களமாகவும் விளங்குகின்ற மதுரையின் சிறப்புகள் இச்சிறப்பிதழின் வழி வெளிப்படும் வகையில் கட்டுரைகள் அமைய வேண்டுகிறோம்.

**பாண்டியன் கல்வி அறக்கட்டளை**

பாண்டியன் கல்வி அறக்கட்டளை தமிழ்மொழி மற்றும் இலக்கியத்திற்காக ஆய்விதழ்கள், புத்தகங்கள், புத்தகப்பகுதிகள் மற்றும் கருத்தரங்க வெளியீடுகளைப் பதிப்பு செய்து வருகின்றது. இது தமிழ் சார்ந்த ஆராய்ச்சியை வளர்ப்பதற்காகப் புகழ்ப்பெற்ற கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுடன் தேசிய மற்றும் சர்வதேச அளவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கருத்தரங்கு மற்றும் மாநாடுகளை நடத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக தற்போது இந்த கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்**

தமிழர் பண்பாட்டில் கோவில்கள் மிக முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. அதன் தொன்மை, சிலைகள், கட்டிடக்கலை நுட்பங்கள், யோக மற்றும் ஆன்மிகத் தத்துவங்களைக் கண்டு வியக்காதவர் இலர். இந்தியா முழுவதும் சைவ மற்றும் வைணவக் கோவில்கள் அதிகம் காணப்படுகின்றன. மனிதர்களின் மதக் கோட்பாடுகளில் தொன்மையானக் கோட்பாட்டை உடையது இந்து மதமாகும். அதில் எண்ணற்ற உட்பிரிவுகள் உள்ளன. பெருங்கோவில்கள் முதல் சிறுகோவில்கள் வரை அனைத்து கோவில்களும் பலவிதமான மையக் கோட்பாட்டைக் கொண்டுள்ளன. கோவில்கள் சக்தி பீடங்களாகவும், சக்கரங்களாகவும் கருதப்படுகின்றது. கோவில்களின் தோற்றம், வடிவமைப்பு, பூசைகள், ஆன்மிகத் தத்துவங்கள், சித்தர்களின் கோட்பாடுகள், கட்டிடக்கலை, தமிழர்களின் கோவில் பணி, அறப்பணி மற்றும் உலகளாவிய கோவில் கலையை ஆராய்வதே இவ்வாய்விதழின் நோக்கமாகும்.

**பொருண்மைகள்**

- மதுரை மீனாட்சியம்மன் கோவில்
- மதுரை மீனாட்சி திருக்கல்யாணம்
- மதுரைத் தேர்த்திருவிழா
- மதுரைப் புட்டுத்திருவிழா, வளையல் விற்ற திருவிழா
- செங்கோல் வழங்கும் விழா
- மதுரை திருவாப்புடையார் கோவில்
- மதுரையில் திருவிளையாடற் புராணத்தின் தாக்கம்
- நாயன்மார்**கள்** & ஆழ்வார்**கள் பாடிய** மதுரை தலங்கள்

- மதுரை அழகர்கோவில் வரலாறு
- மதுரை அழகர் கோவில் கருப்பணசாமி
- மதுரையில் அழகர் ஆற்றில் இறங்கும் விழா
- மதுரை வண்டியூர் திருவிழா
- மதுரையில் தைப்பூச தெப்பத் திருவிழா
- மதுரைப் பாண்டி கோவில்

இது போன்ற மதுரை கோவில்கள் குறித்த பல தலைப்புகளிலும் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன

**கட்டுரையாளர் கவனத்திற்கு…**

**அனைத்துத் துறைசார்ந்த கல்லூரிப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள்** மற்றும் **தமிழ் அறிஞர்களிடமிருந்து கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. ஆய்வுக்கட்டுரையைச் சொற்கோப்பில்** (Word Document) A4 **தாளில்** 1.5 **இடைவெளியுடன்** (3000 - 4000 **சொற்கள்**) **ஏரியல் யுனிக்கோடு** (Arial Unicode) **எழுத்துருவில் கணினி வழி தட்டச்சு செய்து** **jeyamadhan05@gmail.com** **என்ற மின்னஞ்சல்** முகவரிக்கு 15.03.2022 **க்குள் அனுப்புதல் வேண்டும். கருத்துத் திருட்டு ஓர் அறிஞருக்கு இழைக்கும் அநீதியாகும். எனவே, ஆய்வுக்கட்டுரைகள் சொந்த படைப்பாக இருத்தல் அவசியம். தலைப்பு, ஆய்வுச்சுருக்கம், முக்கிய வார்த்தைகள்** (4-6) **மற்றும் நூற்பட்டியல் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அமைய வேண்டும். ஆய்வுக் கட்டுரைகளில் ஆய்வு முறைப்படி குறிப்பு மற்றும் நூற்பட்டியல் இடம் பெற்றிருக்க வேண்டும். ஆய்வுக் கட்டுரைகள் கருத்துத்திருட்டு உலவி மூலம் சரிபார்க்கப்பட்டும் தகுந்த மதிப்பீடு செய்யப்பட்டும் பரிந்துரை வழங்கப்படும். சீரிய திருத்தங்கள் செய்யப்பட்ட கட்டுரைகள் மட்டுமே சஞ்சிகையில் பிரசுரம் செய்யப்படும். நெறிமுறைகளை பின்பற்றாத கட்டுரைகள் நிராகரிக்கப்படும். ஆய்வுக் கட்டுரை மாதிரி பார்க்க சொடுக்கவும்** **https://tinyurl.com/287zjkut**

**காணொளி பங்கேற்பிற்கான விபரம்**

28.02.2022 **திங்கள்கிழமை அன்று சிறப்பிதழ் ஆசிரியர், இதழாசிரியர் மற்றும் மதிப்புரை வல்லுநர்களுடன் கட்டுரையாளர்கள் கலந்துரையாட வாய்ப்பளிக்கப்படும். பங்கேற்பாளர்கள் தங்கள் ஆராய்ச்சியைப் பற்றி சுருக்கமாகக் கூற வேண்டும். கலந்து கொள்பவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.**

**சிறப்பிதழ் இணைப்பு விவரம்**

**பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்** (E-ISSN: 2583-0880) **சிறப்பிதழ் "மதுரை கோவில்களும் திருவிழாக்களும்" - திங்கள்,** 28 **பிப்ரவரி காலை** 10:00 **முதல் மாலை** 5:00 **வரை மணி. கூகுள் மீட்** (Google Meet) **இல் நடைபெறுகிறது. அதில் இணைவதற்கான வீடியோ இணைப்பு:** **https://meet.google.com/wek-brhk-tqq**

**பதிவுக்கட்டணம்**

**பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் & ஆர்வலர்கள்: ரூ.800**

**பதிவுக்கட்டணம் செலுத்தும் விபரம்**

**பசுமை வங்கி முறைகளைப் பணப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தவும். பணப் பரிவர்த்தனையைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கிற்குச் செலுத்தவும்.**

**பெயர்** : சா.ரிஸ்வானா பர்வீன்

**வங்கியின் பெயர்** : ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா

**வங்கிக்கணக்கு எண்**: 20195907312

**ஐ.எப்.எஸ்.சி (IFSC)** : SBIN0002254

**அலைபேசிஎண்** : 9043230500 (**ஜிபே**/gpay)

**பதிவுப்படிவம் மற்றும் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டு உரிய கூகுள் படிவ** **https://forms.gle/p8x9c284jEzDe8SQA** **முகவரிக்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள்**: 25.02.2022.